ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

අංක 2016/30 - 2017 අප්‍රේල් මස 25 වැනි අඟහරුවාදා - 2017.04.25

*2016/30 ஆம் இலக்கம் - 2017 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

### அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் செய்யப்படும் பிரகடனம்

(முத்திரை)

மைத்திரிபால சிறிசேன.

இத்தோடுள்ள அட்டவணையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பின்வரும் சேவைகளை அத்தியாவசிய சேவைகளாகப் பிரகடனம் செய்யும் பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 40) 17 ஆம் பிரிவின் கீழ் கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளமையாலும், குறிப்பிட்ட அட்டவணையில் குறித்துரைக்கப்பட்ட சேவைகளைப் பேணுவது சனசமூகத்தின் வாழ்வுக்கு அத்தியாவசியமானதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளமையாலும், அது பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 21 (2) ஆம் பிரிவின் பிரகாரமும், அதன் 2 (3) ஆம் பிரிவு சேர்த்து வாசிக்கப்படுகையில் இப்பிரகடனம் குறித்துப் பாராளுமன்றத்துக்கு அறிவிக்கவேண்டுமென்ற பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளதாலும்,

அத்தோடு குறிப்பிட்ட பிரகடனம் விடுக்கப்பட்ட திகதியில் பாராளுமன்றம் பத்துத் தினங்களுக்கு மேற்படாதவகையில் ஒத்திவைக்கப்பட்ட நிலையில் இருந்ததாலும்,

சனாதிபதி, மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், அரசியலமைப்பு உறுப்புரை 70 (1) உடன் சேர்த்து வாசிக்கப்படும் பொதுமக்கள் பாதுகாப்புச் சட்டத்தின் 2 (3) ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம், இப்பிரகடனத்தின் மூலம் குறிப்பிட்ட அத்தியாவசிய சேவைகள் பிரகடனம் சம்பந்தமாகப் பாராளுமன்றத்துக்கு அறிவிப்பதற்காக பாராளுமன்றத்தை 2017, ஏப்பிறல் 28 ஆந் திகதி மு. ப. 9.30 மணிக்கு கூடுமாறு கட்டளையிடுகின்றேன்.

இரண்டாயிரத்துப்பதினேழாம் ஆண்டு, ஏப்பிறல் மாதம் 25 ஆந் திகதியன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

பி. பீ. அபேகோன்,
சனாதிபதியின் செயலாளர்.

1A - G 25075 — 617 (2017/04)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

உள்ளூராட்சி சபையொன்றினால் புரியப்படும் அல்லது பேணப்படும் ஏதாவது விபரிப்புகளைக்கொண்ட சகல சேவைகளும், பணியும் அல்லது உழைப்பும் அத்தகைய உள்ளூர் அதிகாரசபையால் அல்லது அதற்காக அல்லது அதன் சார்பில் செய்ய அவசியமான அல்லது செய்யப்படவேண்டியவிடத்து வீதிக்கழிவுகள், வீட்டுக் கழிவுப்பொருட்கள் அல்லது அத்தகைய வேறு ஏதாவது பொருட்களை அப்புறப்படுத்தல், சேகரித்தல், கொண்டு செல்லுதல், தற்காலிக நிலையில் களஞ்சியப்படுத்தல், பதனிடுதல், தனிவேறாக்குதல், தொற்று நீக்கப்படுதல், கைதவிர்ப்பு அல்லது விற்பனை.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.